## வகுப்பு - 7 - பருவம் - 3 - புவியியல்
## 2. நிலவரைபடத்தை கற்றறிதல்

**பயிற்சி வினாக்கள் :**

1. நில வரைபடத்தை வரைந்து உருவாக்குபவர் ______.

   (1) புவியியலாளர் (2) ஓவியர் (3) கார்டோகிராபர் (4) விஞ்ஞானி

2. கிராபிக் என்பதன் பொருள் ______.

   (1) வரைதல் (2) எழுதுதல் (3) நிலவரைபடம் (4) தொல்லியல்

3. நில வரைபடங்கள் அளவையின் அடிப்படையில் ______ வகைப்படும்.

   (1) மூன்று (2) இரண்டு (3) நான்கு (4) பல

4. சிறிய பரப்பளவு குறித்து அதிக விவரங்கள் தருவது ______.

   (1) அட்லஸ் (2) சுவர் படங்கள்
   (3) நில அளவை படங்கள் (4) தலவரைபடம்

5. கிராமம் மற்றும் நகர்புறங்களின் வரைபடம் ______ ஆகும்.

   (1) கருத்து வரை படம் (2) சிறிய வரைபடம்
   (3) நிலஅளவைப் படம் (4) அட்லஸ்

6. சரியான கூற்றைத் தேர்ந்தெடு:

   (1) புவி மாதிரியினை கையில் எடுத்துச் செல்ல இயலாது
   (2) நிலவரைபடத்தை கையில் எடுத்துச் செல்ல இயலாது
   (3) புவி மாதிரி இரு பரிமாண அமைப்பு.
   (4) நிலவரைபடம் முப்பரிமாண அமைப்பு.

7. வரைபடங்கள் ______ நோக்கிய நிலையில் வரையப்படுகிறது.

   (1) தெற்கு (2) வடக்கு (3) கிழக்கு (4) மேற்கு

8. பொருத்துக.

LIVEWORKSHEETS

1. விவசாயம் - (a) பழுப்பு

2. சம உயரக்கோடு - (b) மஞ்சள்

3. பனி - (c) சிவப்பு

4. குடியிருப்பு - (d) வெள்ளை

(1) 1-(d),2-(a), 3-(b), 4-(c) (2) 1-(b), 2-(c), 3-(d), 4-(a)

(3) 1-(b), 2-(a), 3-(d), 4-(c) (4) 1-(d), 2-(a), 3-(b), 4-(c)

9. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) கலாச்சார வரைபடங்கள் மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்புகளை காட்டுவது ஆகும்

(2) இயற்கை அமைப்பு வரைபடங்கள் மண், நிலத்தோற்றம், வடிகால், தாவரங்கள் போன்றவைகளை காட்டுவது ஆகும் .

(3) நிலவரைபட நூல் என்பது பல வகையான நிலவரைபடங்களின் தொகுப்பு புத்தகம் ஆகும் .

(4) சுவர் வரைபடங்கள் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களின் வரைபடமாகும்.

10. கண்டங்கள், நாடுகள், பெருநகரங்கள், மற்றும் சிறிய உள்ளூர் பகுதிகள் உட்பட சில குறிப்பிட்ட விவரங்களைக் காட்டி வரையப்படுவது ______ ஆகும்

(1) தல வரைபடம் (2) கருத்து வரைபடம்

(3) சுவர் வரைபடம் (4) நிலவரைபடம்

11. ஒரு நாட்டின் மாநில நிர்வாகப் பிரிவுகளைக் காட்டுவது ______ வரைபடமாகும்.

(1) அரசியல் (2) பொருளாதார (3) கருத்து (4) போக்குவரத்து

12. நிலவரைபடத்தில் பயன்படுத்த வேண்டிய முறைக்குறிகள் மற்றும் குறியீடுகளின் தொகுப்பினைத் ______ துறையானது தயாரித்துள்ளது.

(1) இந்திய தொல்லியல் (2) இந்திய நில அளவை

(3) மாநில நில அளவை (4) இந்திய வானிலை

LIVEWORKSHEETS

13. ஒவ்வொரு நிலவரைபடமும் தகவல்களை விவரிக்கும் ______ கொண்டிருக்க வேண்டும்.

(1) திசை (2) அளவை (3) தலைப்பு (4) குறிப்பு

14. நிலவரைபடத்தில் பயன்படுத்தப்படும் பொதுவான சின்னம் மற்றும் குறியீடுகள் ______ அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(1) மாநில (2) மாவட்ட (3) உள்ளூர் (4) தேசிய

15. கூற்று 1: ஒரு இடத்தின் அதிகப்படியான தகவல்களை நிலவரைபடம் வழங்க இயலாது

கூற்று 2: நிலவரைபடம் சிறிய மற்றும் பெரிய பரப்பளவைக் காட்டுகிறது.

(1) கூற்று 1 சரி, 2 தவறு (2) கூற்று 1 தவறு, 2 சரி

(3) இரண்டும் சரி (4) இரண்டு தவறு

16. கூற்று 1: நிலவரைபடம் என்பது புவியின் இரு பரிமாண அமைப்பு ______.

கூற்று 2: புவி மாதிரி என்பது புவியின் முப்பரிமாண அமைப்பு

(1) கூற்று 2 சரி, 1 தவறு (2) இரண்டும் தவறு

(3) கூற்று 1 சரி, 2 தவறு (4) இரண்டும் சரி

17. வரிசைப்படுத்துக.

(1) தலைப்பு, அளவை, குறிப்பு, திசை (2) திசை, குறிப்பு, அளவை, தலைப்பு

(3) அளவை, தலைப்பு, திசை, குறிப்பு (4) தலைப்பு, திசை, அளவை, குறிப்பு

18. கண்டங்கள் அல்லது நாடுகள் போன்ற பெரிய அளவிலான பகுதிகளை ______ கொண்டு வரையப்படும்.

(1) சிறிய அளவை (2) பெரிய அளவை (3) மீட்டர் அளவை (4) அட்லஸ்

19. குறுகிய பரப்பளவிலான இடங்களைக் குறித்து அதிக விவரங்களை தரும் வரைபடம் ______.

(1) அட்லஸ் (2) பெரிய அளவை வரைபடம்

LIVEWORKSHEETS

(3) சிறிய அளவை வரைபடம் (4) சுவர் வரைபடம்

20. நிலவரைபடத்தை உருவாக்கும் அறிவியல் என்பது ______.

(1) பிசியோகிராபி (2) கார்டோகிராபி

(3) ஜியோகிரா:பி (4) வானிலையியல்

21. நிலவரைபடங்கள் ______ முன்னறிவிப்பிற்கு பயன்படுகிறது.

(1) வானிலை (2) மழை (3) பனி (4) புயல்

22. நிலவரைபடங்கள் இராணுவத்தின் ______ பணியில் முக்கிய பங்கு வகிக்கிறது

(1) பாதுகாப்பு (2) திட்டமிடல் (3) போர் (4) அனைத்தும்

23. வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கும் ______ திசைகள் ஆகும்.

(1) கோணங்கள் (2) துணை திசைகள் (3) தீர்க்கரேகை (4) அடிப்படை

24. நிலவரைபடத்தில் இரண்டு இடங்களுக்கிடையே உள்ள தூரத்திற்கும் நிலத்தில் அதே இரண்டு இடங்களுக்கிடையேயுள்ள தூரத்திற்கும் உள்ள விகிதம் ______ எனப்படும்.

(1) திசை (2) குறிப்பு (3) அளவை (4) தலைப்பு

25. புவியியலாளர்களின் ஒரு முக்கிய கருவியாக ______ அமைகிறது.

(1) காம்பாஸ் (2) சாய்வுமானி (3) தல வரைபடம் (4) நில வரைபடம்

26. தாதுக்கள், தொழிற்சாலை அமைவிடங்கள், வாணிப வழிகள் மற்றும் பொருள்களை எடுத்துச் செல்லும் வழிகளைப் பற்றி ______ நில வரைபடம் விளக்குகிறது.

(1) கருத்து (2) கலாச்சார (3) போக்குவரத்து (4) பொருளாதார

27. பொருத்துக.

1. காலநிலை நில வரைபடம் - (a) துறைமுகம்

LIVEWORKSHEETS

2. அரசியல் நில வரைபடம் - (b) ஒப்பு ஈரப்பதம்

3. போக்குவரத்து நில வரைபடம் - (c) மலைகள்

4. நிலத்தோற்ற வரைபடம் - (d) மாநிலம்

(1) 1-(d), 2-(a), 3-(b), 4-(c) (2) 1-(b), 2-(d), 3-(a), 4-(c)

(3) 1-(c), 2-(a), 3-(d), 4-(b) (4) 1-(d), 2-(b), 3-(a), 4-(c)

28. நாடுகள் குறித்து அதிக விவரங்களை உள்ளடக்கிய வகையில் _______ நில வரைபட நூல் தயாரிக்கப்படுகிறது.

(1) பள்ளி (2) தேசிய (3) வட்டார (4) புவியியல்

29. கூற்று 1: முற்காலத்தில் நிலவரைபடம் தயாரிக்க துணிகள், பாப்பிரஸ், ஈரநிலம் மற்றும் களிமண் பயன்படுத்தப்பட்டன.

கூற்று 2: ஒவ்வொரு நிலவரைபடமும் அதன் வடிவமைப்பு, பொருளடக்கம் மற்றும் கட்டமைப்பில் தனித்துவமுடையது.

(1) கூற்று 1 சரி, 2 தவறு (2) கூற்று 2 சரி, 1 தவறு

(3) இரண்டும் சரி (4) இரண்டு தவறு

30. கலாச்சார நில வரைபடங்கள் என்பது _______ அமைப்புகளைக் காட்டுவதாகும்.

(1) மனிதனால் உருவாக்கப்பட்ட (2) நிலத்தோற்றம்

(3) இயற்கையான (4) வானிலை

31. மனிதனால் விரிவாக்கப்பட்ட அமைப்புகளைக் காட்டுவது _______.

(1) மண் நிலவரைபடம் (2) அரசியல் நிலவரைபடம்

(3) கலாச்சார நிலவரைபடம் (4) பள்ளி நிலவரைபடம்

32. நில வரைபடம் தயாரிக்க முதன்முதலில் பயன்படுத்தப்பட்டவை _______.

(1) விலங்குகள் தோல் (2) செப்பேடுகள்

(3) காகிதம் (4) மண்தூள்

33. ஒரு குறிப்பிட்ட சிறிய பரப்பையுடைய இடத்தைப் பற்றிய அதிக விவரங்களை

LIVEWORKSHEETS

பெற உதவுபவை _______.

(1) அட்லஸ் (2) உலக உருண்டை

(3) சிறிய அளவை வரைபடம் (4) பெரிய அளவை வரைபடம்

34. 1 செ.மீ = 200 கி.மீ என்பது ஒரு _______.

(1) சிறிய அளவு வரைபடம் (2) பெரிய அளவு வரைபடம்

(3) தல அளவை வரைபடம் (4) அளவை சாராது

35. காடுகளின் பரவலை மட்டும் ஒரு நில வரைபடம் மூலம் அறிந்து கொண்டால் அவ்வரைபடம் _______.

(1) இயற்கை அமைப்பு நில வரைபடம் (2) கருத்து நில வரைபடம்

(3) புவியியல் நில வரைபடம் (4) மண் நில வரைபடம்

36. நில வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரத்தைத் தெளிவாக புரிந்து கொள்ள உதவுவது _______.

(1) தலைப்பு (2) அளவை (3) திசைகள் (4) குறிப்பு



37. வானிலை சூழ்நிலையைக் குறித்து அறிய உதவும் நில வரைபடம் -------------.

(1) புவியியல் (2) காலநிலை (3) மண் (4) கலாச்சாரம்

38. பின்வருவனவற்றுள் பிரதான சாலையைக் குறிக்கும் நிறம் _______.

(1) சிவப்பு (2) பழுப்பு (3) கருப்பு (4) மஞ்சள்

39. நாட்டின் தலைநகரத்தைக் குறிக்கும் குறியீடு _______.

(1) $\Delta$ (2)  (3)  (4) 

LIVEWORKSHEETS